
66

சங்கரத்தை பிட்டியம்பதி

[illegible]திரகாளி வீரபத்திர சமேத ஆலய

# தேவாரப் பதிகங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஓம் சக்தி

குருவே துணை

சக்தி பத்திரகாளி சமேத வீரபத்திரேஸ்வராய நம:



வட்டுக்கோட்டை, பிட்டியம்பதியில்

கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும்

பத்திரகாளியம்மை சமேத

வீரபத்திரக் கடவுள் பேரில்

இயற்றப் பெற்ற

# தோத்திரப் பாடல்கள்

மேற்படி கோவில் முகாமையாளர்

வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகவுரை

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந் தனவே''
— என்றார் பாரதியார்

ஈன்ற தாயை நாம் அறிந்திருப்பதைப்போல சமயத்தையும் அறிந்திருக்க வேண்டும்.

கடவுள் ஒருவர் இருக்கிறார் கடவுள் எங்கும் இருக்கிறார்
கடவுள் எல்லாம் அறிவார் கடவுள் எல்லாம் வல்லவர்
கடவுள் இரக்கம் உள்ளவர் கடவுள் நம்மைக் காக்கிறார்
கடவுளை எந்நாளும் வணங்கு கடவுளை ஒருபொழுதும் மறவாதே.

என்ற திருவாக்குகளின்படி நாம் என்றும் இறைவனை வழிபாடு செய்து, மானிடப்பிறவி எடுத்த மக்கள் ஒவ்வொருவரும் தாம் முன் செய்த நல்வினை தீவினைக்கேற்ப இவ்வுலகில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றார்கள். வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் ஒரு நாளில் அரை நிமிடமாவது தியானம் செய்ய மனதைக் கட்டுப்படுத்த வேண்டும். அல்லது போனால் பிறந்தும் பயனில்லை. "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' இறைவனைக் காண்பதற்கும் எம் வசப்படுத்துவதற்கும் பல வழிகள் உண்டு. ஆனால் இராவணன் காட்டிய வழியின்படி இசைதான் இறைவனைக் கவரக்கூடியது என்பது தெளிவாகின்றது. கோவில்களில் பக்தர்கள் கூட்டமாக நின்று இறைவனைப் பாடும் பொழுது தங்களையே தாங்கள் மெய்மறந்து நிற்பதல்லாமல் சூழ்ந்திருக்கும் அடியார்களையும் மெய்மறக்கச் செய்கின்றார்கள். என்னே இசையின் மயக்கம், ஆகவே, இங்கு தொகுத்து அளிக்கப்பட்டிருக்கும் தேவாரப்பதிகங்களைப் பாடி, பிட்டியம்பதியாள் அருளைப் பெற்றுய்வீர்களாக.

— அன்பன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

# பதிப்புரை

---

சகல சீவராசிகளுக்கும் முதன்மையானதும் அவைகளைப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் என்னும் பஞ்ச கிருத்தியங்களினாலும் முத்திப் பேற்றுக்கு வழி செய்தும் இதை உணர்வெனும் ஒரே கருவியினால் அறிந்து உய்யுமாறு மானிடப் பிறவியைக் கொடுத்து அருள் புரியும் முழுமுதற் பொருளே சிவம். இச்சொல் சிவமும் சக்தியும் ஒன்றென் பதனைத் தன்னுள் அடக்கியிருக்கிறது. இன்னும் சிவமின்றிச் சக்தியில்லையென்று திருவருட்பயனும், சக்தியின்றிப் படைப்பில்லை என்பதனையும் நாம் உணர்வு வாயிலாக அறியலாம். சிவத்தை உணர்வதற்கு ஏதுவானவைதான் இந்திரியங்கள். இதில் கண், மூக்கு, செவி, மெய் என்பன மிகவும் இன்றியமையாதவை, நான்முகன் படைப்பில் நாம் யாவரும் சமமேயாகும்.

ஞான இந்திரியங்களுக்கும் அடங்காத ஆணவம் உண்டு. தக்கன் நான்முகனுக்கு மகனாக உதித்து, சிவனையே தவம் செய்து வரங்களும் பெற்று ஆணவமல பரிபாகம் இல்லாது முத்தியின்பம் இடைத்தலாகாது பிறழ்ந்தான், தக்கன் யாகமும் வதையும் பின் முத்தியடைந்ததும் இதைக் கூறுவன. 'பதினாறும் பெற்று வாழ்' என்ற வாழ்த்துதலையும் ' நாற்குணமும் நாற்படையா ' என்னும் நளவெண்பாவும் வீரத்தின் இன்றியமையாமைக் கூறுவன. சிவத்தின் தத்துவங்களில் வீரம் ஒன்று. அதற்குரிய சக்தியோடு ஆணவத்தை பரிபாகம் செய்யவே வீரபத்திரக் கடவுளும் பத்திரகாளி அம்மையும் சிவசக்தி அவதாரங்களாக அவதரித்தனர். விரிஇற் பெருகும். ஆகையால் இதை உணரக்கூடிய வரையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயம்பினோம். உணர்ந்து ஒளியுருவும் பரம்பொருளுமாகிய சிவத்தை அடைய வழிபடுமாறு பிட்டியம்பதியில் கோவில் கொண்டெழுந்தருளி இருக்கும் வீரபத்திர சமேத சக்தி பத்திரகாளி அம்மையை உள்ளன்போடு இடைவிடாது வழிபடுவோமாக.

பின்வரும் பாடல்கள் தோத்திரம் செய்ய உகந்தவையென எண்ணிப் பக்தர்களின் பொருட்டு வெளியிடுகிறோம். பயனடையவும்.

சில அம்பாள் பக்தர்கள் இதைப் பதிப்பித்து வெளியிடுமாறு கேட்ட காரணமாயும், கருவியாயும் இருக்கிறார்கள். அவர்களுக்கு அம்பாள் அனுக்கிரகிக்கப் பிரார்த்திக்கின்றோம். அனைவருக்கும் எமது நன்றி உரித்தாகுக. குறைகளைத் தவிர்த்துக் குணங்களைக் கொள்ளவும்.

பத்திரகாளி கோவில்
சங்கரத்தை
15-3-72


இப்படிக்கு
கோவில் முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# கோவில் வரலாறு

பிட்டியம்பதி சங்கரத்தையில் ஓர் புண்ணிய பூமி. இது சங்கரர் வழிவந்த பெருமையினர் பரம்பரைக்குரியது. இப்பதியில் அன்றுதொட்டு இன்றுவரை ஒரு புளிய விருட்சம் நின்று வருகின்றது. இவ்விருட்சத்தில் பட்சிசாலங்கள் கூடியிருந்து சுற்றியுள்ள நிலங்களின் விளைபொருட்களை அழித்து வந்தன. இதை எமது முன்னோராகிய மூதன்மையினர் கண்டு அவ்விருட்சத்தை வெட்டி வீழ்த்த எண்ணிய அக்காலத்தில், வட்டுக்கோட்டையில் கிறிஸ்தவ ஆலயம் கட்டும் வேலையில் ஈடுபட்டு நின்ற தச்சன் ஒருவனை அழைத்து அவ்விருட்சத்தைத் தறிக்கும்படி ஏவினார். அவன் அதை மறுத்தும் கேளாது தானே அவ்வேலையைச் செய்ய முயன்றார். அப்போது ஒரு நாகசர்ப்பம் அவரை எதிர்த்துத் துரத்தியது. துரத்தவே ஓடி இளைத்து ஓர் பனைமர நிழலில் நின்றார். அந்நாகம் சற்றுத்தொலைவில் தலைதூக்கி ஆடி நின்றது. இதைக்கண்ட பெரியார் தாம் அபசாரம் செய்து விட்டதை நினைந்து வருந்தித் தமதிடம் மீண்டார். அன்றிரவே அழகு மிக்க அம்மை அவர்கனவில் தோன்றி தனக்கு அவ்விடத்தில் ஓர் நிழல் இயற்றும்படி கூறிமறைந்தார். இந்நிழலிலே இன்று வளர்ந்து நாம் காணும் பிட்டியம்பதியில் கோவில் வடிவம் தோன்றியது என்பது ஓர் கர்ணபரம்பரைக் கதை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிட்டியம்பதி என்று கூறப்படும் ஆதிமூலம்



பிட்டியம்பதித் திருக்கேணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்

திருச்சிற்றம்பலம்

## கணபதி துணை

1 கண்ணே ஈசனென்றும் கணபதியே நமோ
விண்ணே பரனேஎன்றும் போற்றிசெய்ய-என்றும்
என்னே இதுவென்று சொல்லவல்ல பண்ணே
பாடஎனக்கருள் தருவாய் கற்பகமே.

## குரு துணை

2 சித்திர மூத்தென்னும்
தவத்திரு யோகமுத்தன்
தூயமலர் பாதமென்றும்
சென்னிமிசை சேர்த்துவைப்பாம்.

3 பொருள்கொண்டு உன்னைப்போற்ற ! இயலாத - என்னை
அருள்கொண்டு வந்து ஆனந்த மாக்கி
இருள்கொண்ட மனத்தை இமையாது நின்று
ஈராறு தோளும் ஓராறு முகமுங்கொண்ட
ஒருபொருள் உனக்குவாய்த்ததே அதைப்பற்றி நிற்பாய்
எனவும் நின்சொல்லை இன்னும் உறுதியோடுபற்ற
முடியாத பித்தனை பரிந்து அருள்வாய்
ஞானகுருவே அருள்மிக்க சிலகுருவே
திருத்தவயோகி சித்திரமுத்து குருவே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 ## குருவே பாரில் பரனே

i. கொலையும் புலையும் களவும் தவிர்ந்து
புவியில் பணிகள் புரியும் பெரியோய் (குருவே)

ii. திருவும் கலையும் உனதுள் உடையோய்
விதியும் பணியும் கிடையா துடவோய் (குருவே)

iii. பொன்னும் மண்ணும் நீங்கி உயர்ந்தோய்
மருளும் இருளும் அகன்ற நெஞ்சோய் (குருவே)

iv. அன்பும் பண்பும் சொட்டும் ஒலியோய்
அகலா திருந்து கரவா தருள்வாய் (குருவே)

v. பாரினில் இன்பம் பரவச் செய்வோய்
பரத்தினில் ஒன்றி யிருக்க அருள்வாய் (குருவே)

## முருகன் துணை

5 கற்பகத்திற் கிளையோனே
காதருக்கு எழியோனே
கலியுகத்தில் கலியோனே
சரணவத்தின் பொருளோனே
சிற்பரத்திற் சோதியனே
அடியனுக்கோர் ஆரமுதே
அருள்புரிவாய் குறைவுறுமல் பதம்தொடுக்க
நின் தண்டைக்கால் என்றும் சரண்.

## சரஸ்வதி துணை

6 தாயே சரஸ்வதியே தாமரையில் வீற்றிருப்பாய்
வீணை கரத்தில் வைத்து ரீங்காரம் செய்திடுவாய்
நான்முகனும் இன்பமுற்று நயம்புரியச் செய்திடுவாய்
பாரில் நினக்குநிகர் யகவார்இல் என்தாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சோதி வழிபாடு

7 ஆதியே அனாதியே அம்பலத்தில் சோதியே
போதியே புராணனே புகழ்நிறைந்த புரகனே
நீதியே நெறியனே நின்மல சொரூபனே
வாரியே வழியனே வழிநிறைந்த பரனே
சோதியே துரியனே துதிக்கநிற்கும் சுடருமாய்
குருவுமாய் தற்பரமுமாய் துலங்கி நிற்கும்
சோதியே சரண்.

## தோத்திரம்

8 பிட்டியம்பதி வளர் பிரானே போற்றி
பேரருள் புரிந்திடும் பிராட்டி போற்றி
நாடினோர்க்கருள் பொருள் ஆவாய் போற்றி
நன்னிலமதனைத் தேர்ந்து நயம்பல புரியும் வண்ணம்
புளியினில் விஷ்வரூபம் கொண்ட எம்பரனே
உன்னை விடுவனோ தாராய் அருள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குரு துணை

### புராணம்

கணபதி – காப்பு

9 பிட்டிப் பதியில்வளர் பத்திரகாளி அம்மை
அன்புமிக்க நாயகன் வீரபத்திரன் - புகழோங்கு
புராணமதை நேய முடன்எடுத் தியம்ப
தும்பிமுகன் காப்ப தாமே.

வீர பத்திரக் கடவுள் வாழ்க
வித்தகர் செம்மல் தாழ் வாழ்க
பத்தினிக் கன்புசெய் பரனே வாழ்க
பாவலர் உள்ளத்து ஒளியே வாழ்க
பண்பும் குலமும் ஒருங்கே திகழும்
பெருமையினர் மரபின் வழியே வாழ்க
மண்ணில் செந்நெல் மிகவே பொலியும்
பிட்டியம் பதியின் திகழ்வோய் வாழ்க
சங்கரர் மரபுசெய்த தவத்தின் பயனேவாழ்க
புளியினில் கோயில் கொண்டோய் வாழ்க
மன்னர் வழிவரும் மாண்புறு முதன்மையினர்
கட்டிய நிழலில் நிலைத்தோய் வாழ்க
என்நெஞ்சில் நீங்கா ஓமே வாழ்க
என்செவியில் ஒலிக்கும் ஒலியே வாழ்க
என்கண்ணில் திகழும் ஒளியே வாழ்க
என்நாவில் ஊறும் அமுதே வாழ்க
என்சிந்தையில் நீங்காச் சித்தே வாழ்க
என் ஆணவம் அளிக்கும் அருளே வாழ்க
அன்பர் உள்ளத்தில் அகலா திருப்போய்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பொன்னும் பொருளும் துச்ச மென்ற
தூயரு ளத்தின் சோதிப் பொருளே
தீயவழித் தக்கன் ஆணவம் அழித்தோய்
ஆயிரம் முகங்கள் கொண்ட எம்பரனே சரணம்
வட்டு நகர்வாழ் பக்தர் வணங்கும் சேவடி சரணம்
சீரிய வழிவரும் பூசுரமாரும் பக்தியோடு
இன்மலர் கொண்டு போற்றிடும் திருவடி சரணம்
பக்கத் திருக்கும் சித்திரப்பாவை பத்திரகாளிப்
பத்தினி யம்மை திருவடி சரணம்
சரணம் சரணம் நின்பரிபுர பதங்கள்
சரணம் சரணம் என்றுமே சரணம்

~~~~~~

10 பூசுரமார் சந்ததியும்
வட்டுநகர் வாழ்பவரும்
சுற்றுமுள அயலூர்வாழ்
பத்தர்களும் தொழுதேத்த
சுத்தசக்தி மங்கையொடு
பல்லோர்க்கும் வாழ்வுமிக
தேர்ஓடும் நெல்வயல்சூழ்
பிட்டிவளர் பதிபோற்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
~~~~~~

## ஓம் குரு துணை

### புகழ்

11 1. அரன் தனக்கு அன்புமிக்க சேயேநின்
அன்பு பெற்ற அடியார்கள் பாதுகாவே
பிட்டியம் பதியில் வளர் முதல்வோனே
பிராட்டி தனில் அன்புமிக்க வீரபத்திரா

தக்கனையும் வதம் செய்த அதிவீரா
தக்கோர் மனதில் விளையாடும் சோதி
ஆயிரம் முகங்கள் திகழ் அருளோனே
அடியனையும் ஆண்டு கொள்ளும் பெருமானே,

2. அம்பலத்தில் ஆடுகின்ற அரன்சோதிக்கு
அம்புவியில் அவதரித்த மாவீரா
பிட்டியம் பதியில்வளர் பத்திரகாளி
அம்மைதனில் அன்புகொண்ட வீரபத்திரா
நெல்வயல்சூழ் அழகுமிக்க சங்கரத்தை
ஊரில்உள்ள அடியார்கள் உய்யவென்று
சிவசக்தி ஆகிநிற்கும் பெருமானே
அடியனுக்கும் நினதருளைத் தரவேணும்

### ஓம் குரு துணை

12 சிவ சிவ ஓம் சிவ சிவ ஓம்
சிவ சிவ சிவ சிவ சிவ சிவ ஓம் (சிவ சிவ)

உமை உமை ஓம் உமை உமை ஓம்
உமை உமை உமை உமை உமை உமை ஓம் (சிவ சிவ)

கணபதி ஓம் கணபதி ஓம்
கந்தா சரவண பவகுக ஓம் (சிவ சிவ

குரு பரனே குரு பரனே
கொஞ்சு மொழி பகர் குருபரனே (சிவ சிவ)

பாரினில் வாழ்ந்திடும் பக்திமை யாளர்
பகர்வது நிமிடமும் சிவசிவ நாமம் (சிவ சிவ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவது சிந்தை தெரிவது சோதி
அறிவது ஒருபொருள் அகிலமும் அதுவே (சிவ சிவ)

விடு விடு ஆசை வெற்றியுனதென
பகர்வது நிறையருள் குருமொழியாமே (சிவ சிவ)

முக்திநிலையது உணர்வது கடமை
மோட்சமதில் நாம் எய்திடல் அரிதே (சிவ சிவ)

வாழ்க அரன் நாமம் வாழ்க குருபாதம்

குரு துணை

13 1. ஞானமே உனை வேண்டினேன்
அருள்செய்குவாய் இன்பம் நல்குவாய் (ஞான)

2. பரமனைத் துதியாத வானவர்சிரம்
கொய்திட்டாய் நெறி கூறிட்டாய் (ஞான)

3. அம்பிகை அருள் தேவியைப் பாகம்
வைத்திட்டாய் சக்தி கூடிட்டாய் (ஞான)

4. அராலி அய்பதி செம்பிதோட்டம் கோவில்
கொண்டிட்டாய் அன்பர் சேர்ந்திட்டார் (ஞான)

5 பங்கை ஆசனம் அமர்ந்து நல்லன்பர்
பங்கையத்தினின் மேவிட்டாய் அருள் பாரிப்பாய்
(ஞான)

6. நெஞ்சம் புண்ணது ஆகுதே இன்னும்
வறுமையோதீர நின்னருள் இல்லையோ (ஞான)

7. பாடினேன் உன்னைப் பரவினேன் இனி
சோதியாதருள் நல்குவாய் பதம் சேர்ந்திடாய்
(ஞான)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விருத்தம்

14 அன்பினுல் உன்னை அடைந்தே விட்டார்
அருமறை புனைந்த பெரியோய்
நின்தழலிலே வந்த கந்தனே வீரபத்திரனே
அசுரரை மாய்த்த மக்கள்
விண்ணிலே நிற்கும் சோதியே உன்னைக்
கண்ணிலே காண உறுத்திஞர் சித்திரமுத்தர்
மண்ணிலே இன்னும் மதியிழந் துழல்தல்
தீருமோ திண்ணமாய் அறிய வல்லேன்
ஆசையோடு அவாவும் உறுத்துதே நெஞ்சை
நிலையாகி நிற்க வொட்டாது
இனிஎன்ன செய்குவேன் எவ்வுதவி வாய்க்குமோ
சிறிதேனும் ஈடேற உதவி புரிவாய்
உள்ளமே புகுந்து ஒளியாகி நின்றுகாதில்
இசையாகிக் கேட்கும் பரம்பொருளே

## தந்தனதன தந்தனதன தந்தன தனன

15 இன்பமே என்றும் புரிகுவாய் இதயசோதியாய்
விளங்கும் பேரொளி
விண்ணிலே நிற்கும் நின்னையே காணக்
கண்ணிலே ஒளிரும் பேரொளி
சிந்தையில் வந்து தெவிட்டுதே எவரும்
உணரொணு தந்தப் பேரொளி
வித்தையாய் என்றும் விளங்குதே
சித்தர் முத்தர்கள் பேசும் பேரொளி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட நாளிகை உண்ட இன்பமும்
கருத்திலே அன்றி வேறில்லை
சுயம்புவாம் சிவசோதியெம் பரஞானமாம்
அந்தப் பேரொளி
அறிகுவாய் அதை அறிகுவாய்
அன்பு கூடினல் அன்றி அறியலாது
இருவருள் இன்றி கைவசிமை யில்லை
சற்குரு பதம் நாடுவீர்
பாடுவீர் என்றும் பாடுவீர் சிவ
இருப்பியோ என்று பாடுவீர்

16 அன்புடன் அழைத்தீர்
ஆக்கமும் கொடுத்தீர்
இனியன பற்பல குறையாதுரைத்தீர்
ஈயாதலோபியாம் என்போர்க் கெல்லாம்
ஈகை இதுவென இயம்பாதுரைத்தீர்
உறுதுணையாக உன்ஒளி தந்தீர்
ஊக்கமும் இல்லை ஆக்கமும் இல்லை
என்றே என்றும் தவறுதுணர்த்துவீர்
ஏழைகள் என்றால் இகலும் பாராதொளியே கொடுத்தீர்
ஐயாநின் தவத்தின் பெருமை எம் அறிவினுக்கு உறுதுணை
ஒளியின் வழி நின்றுணர்வோர் எவர்க்கும்
ஓங்கார வடிவாய் சோதியாய் நின்று
அம்பதினும் இன்பமயமாகியநின் திருவடி சரணம்
சரணம் சரணம் குருவே சரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தானனானா தானனானா

பொன்னும் பொருளும் இக்கலியிற் சேர்க்கிறார்
உன்னை மறந்தேதான் பெரியவர் என்கிறார்

ஆணவமுடன் அகந்தை சேர்ந்திடும்
பெரியார் என்பவர் சிறியர் அல்லவோ

ஆசையின்வழி நின்று உழல்பவ நிரல்லாம்
உன்னடி சேர என்றும் முயல்வரோ

அறிவு வளரவே பெருமை சார்ந்திடும்
சிறுமையாகவே உன்னை நாடுகிறேன்

வறுமை வந்திடின் துயர்கள் மேவிடும்
அன்பு மேவிட உன்னை நாடுவேன்

காலன் வந்திடில் அஞ்சி உயிர் விடேன்
கடுகி உன்னடி சேர வேண்டுவேன்

குருவின் அருளைப் பெற்று உயிர்வுற நாளும்
பொறிகள் ஒடுக்கியே தத்புருஷம் நாடுவோம்

அரனின் நாமம் சிந்தையிலிருத்தி
இடைவிடா தேத்திப் பாடுவோம் துதியே
பாடுவோம் துதியே பாடுவோம் துதியே
பாடுவோம் துதியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றியவர் : நாகலிங்கசுவாமிகள்

திருமேவு கைலாய மலைமீது செம்பொற் திருக்கோயில்
தடுவி லியம செல்லி உமையம்மையார்
வாம பாகத்தினிற் சேர்ந்தருள வீற்றிருக்கும்
உருமேவு சிவபிரான் சந்நிதியில் மாலாதி உம்பர்
வந்தனை புரிந்தே ஓங்காரர் ஜெயகொடுமை
தாங்கரி எமக்கு அருள்செய் ஒருமதலை என்று கேட்க
அருமேவு நெற்றிவிழி ஆலாறு பொறிதரலும் அம்மையார்
அஞ்சி ஓட அதிர் சிலம்பினின்று துதி நவசக்திமணி
மாதரில் மருமேவு மலர்வதன மாணிக்க வல்லிபால்
வந்திடும் சிவகுமரனே வரமேவு குகதாச கணநாத
சிவ வீரபத்திரக் கடவுளே.

ஆங்காரி ரீங்காரி ஓங்காரி என்றுமே அள்ளி
நீறிட்டவுடனே ஆடாத மாடனும் முனியும்
கறுப்பனும் ஆடுமே இருளுபின்னும் வாங்கியே
ஆடுமே வருகின்ற பேய்பெல்லி மாறுத சன்னி தோஷம்
வஞ்சனைகள் சூனியம் பெல்லிப் பசாசுகள் விட்டுப்
பறந்தோடுமே நீங்காமல் உனது சந்நிதி தன்னில்
அடியார்கள் நித்தமும் தொழுது ஏத்தியே
நீலி, திரிசூலி, கபாலி, காமாட்சி, வடபத்திர காளி நீ
எனக்கு அருள் புரிகுவாய் பாங்கான பிட்டியம்பதி
தனில் பதிந்திடும் பத்திரகாளியே அருள் புரிகுவாய்.

ஆரணத்துபநிடத அக்கரத் தொனியாகி ஆகாச வட்டமாகி
அறுகோணம், இருகோணம், முக்கோணம், நாற்கோணமாகி
நிறமைந்துமாகி காரணத்துருவாகி அருவாகி ஒளியாகி
காக்கும் உன்பெருமை எளிதோ கருணைப் பிரவாக
ஆனந்த வெள்ளம் கசிந்தூறு பேராளியே ஏரணத்தி
பிட்டியம்பதி தன்னில் சிறந்து மேவும் யாமள சவுந்தரி
கோமள சொரூபவர ராசபர ஈஸ்வரியே எனை வந்தருளும்
நாரணி நாரணனுக்கு ஒரு சகோதரி நாகமணி உம்பரவர்
பாகமுறு மேகசிவ பத்திரகாளி அம்மையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரெலாம் துதிபெற்ற பாதவிரல் மோதிரம்
பாடகம் தண்டை கொலிசும்
பச்சை வைடூரியம் இச்சையாய் இழைத்திட்ட
பாதச் சிலம்பின் ஒலியும்
முத்து மூக்குத்தியும் இரத்தின பதக்கமும்
மோகன மாலை அழகும் முழுதும்
வைடூரியம் புஸ்ப்ப ராகத்தினால் மூடிநந்திட்ட
தாலியழகும் அந்தரி திகம்பர
பரம்பரை மனோன்மணி ஆதியாய் நின்ற உமையே
அழகான பிட்டியம்பதிதனில்
புகழாக அமர்ந்திடும் அம்மை
சக்தி பத்திரகாளி உமையே.

அண்டங்கள் புவனங்கள் அத்தனையும் தாமாகி
அரிஅயன் உருத்திரனுமாய் ஆதியாய்ப் பிரணவ
சொரூபியாய் உலகுக்கோர் அன்னையென வந்த
தாயே குண்டலினி சக்தியே உலகுய்ய உண்மைநிலை
கொடுத்தருளும் ஓம் சக்தியே குஞ்சர முகற்கிளைய
கருணையாம் முருகனைக் கொடுத்தாண்ட பரதெய்வமே
கண்டத்தில் கொடுவிடம் உண்ட அரன்பாகியே
காமசிவ காமபீட கையிலாயமாம் பிட்டியம்பதிதனில்
புகழாக அமர்ந்திடும் அம்மை சக்தி
பத்திரகாளி உமையே.

சித்தி சுந்தரி கௌரி அம்பிகை க்ருபாநிதி
சிதம்பரி சுந்தரி பரசிற்பரி சுமங்கலி
நிதம்பரி விடம்பரி சிலாசுத விலாச விமலி
கொத்து திரிசூலி திரி கோணத்தி
ஷட்கோணகுமரி கங்காளி ருத்திரி
குலிச ஓங்காரி ரீங்காரி யாங்காரி ஹூங்காரி
ரீங்காரியம்பா, முத்தி காந்தமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்குண துரந்தரி மூவர்க்கு முதல்வி
ஞான முதுமையைக் கலைவாணி
அற்புத புராதனி மூவுலகுமான சோதி
சக்தி சங்கரி நீலி கமலி பார்வதி
அழகான பிட்டியில் புகழாக அமர்ந்திடும்
சக்தி பத்திரகாளி உமையே,

பெற்றதாய் நீ உள்ளமட்டும் நான் குபேரற்கு
பெரும் மார்க்கண்டனுவேன் பிறவிப் பெருங்கடலை
நீந்திக் கரைகண்டு பேரின்ப வீட்டில் வாழ்வேன்
மற்றதாய் தன்னை கனவிலும் நினைவிலும் மறந்தன்
என்று மதியனம்மா மனப்பால் தனப்பால் குணப்பால்
அருந்தாது மெய்ஞானமான உமைபால்
குடிப்பேன் உற்றதாய் எல்லா உயிர்க்கும் ஒரு
தாயாக உலகுமாதாவுமாக ஒரு தாயும் உன்போல்
இருப்பதாகக் கேட்டிலேன் உறுதி முழுவதும் உண்மை
கற்றதா நான் எண்ணிவிட்டதா நீ எண்ணிவிட்டதா
கைவிடாது
அருளால் வேண்டும் காட்சி நிறை ஆட்சிபெற
பிட்டியம்பதியில் உறை சக்தி பத்திரகாளி உமையே.

கொத்து மத்தொடு பவள உத்தாரம் உள்ள நீ
கோளமணி மார்பழகி நீ குக்குடக் கொடியுடைய
முருகோனை ஈன்றநீ குற்றுதன முள்ளவளும் நீ
சக்தி சிவசக்தி நவசக்தியென வந்த தங்கை
கண்ணகை அம்மன் நீ தாயவன் புவி மீது
மாயவள் தங்கையென தற்காக்க வந்த தாயே
எத்திசையுமே துதித்து கண்டிகை சிந்தரி
உன்புதுமை எண்ணுதற்கு எளிதாகுமோ
காஞ்சி காமாட்சி நீ மதுரையில் காளி நீ மதுரையில்
மீனுட்சி நீ காமாட்சி சக்தி உமைநீ
கன்னலொடு செந்நெல் விளைகின்ற
பிட்டி நகர்சக்தி பத்திரகாளி உமையே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிகம் — வீரபத்திரர்

அக்குமணி மிக்கசெக் கர்ச்சடையு
முக்கண்ணு மாயிரங் கமலமுகம்
அணிமணிக்குண்டலங் குழைகளுங் குலமலையினழ
கொழுகு கனகபுயமும்
தொக்குயர் படைக்கலக் கைகளும்
மார்பிற்றுலங்கு செம்பொன் னாரமும்
சுருதியுங் கருதரியபரிபுர பதங்களுந்
தோன்ற வந்தெனை யாளுவாய்
தக்கனொடு மக்கள் மருமக்கள் பக்கத்திலுறைசதுர் முகன்
முதல் வானவர் தங்கள் கருவங்களதி பங்கம் படச் சிவன்
தலைமை நிலையிட்ட முதல்வா
திக்குலவு சோலையும் சாலையும் பாலிற் செறிந்த பிட்டிப்
பதியில் வாழ் சித்திரவலங்கார பத்திரகாளிக்கன்பு திகழ்
வீரபத்திர குருவே.

## பத்திரகாளி

திருமருவு பரமசங்கர கிருபாகரவரத
திருபுராந்தகப பகவனைத்
திடமனத்துடனன்று வடவனத்தினின்று
சேர்ந்து வாதாடி யோடி
உருமருவு மண்டல மொடண்டர் பயில்
எண்டிசைகள் உயரண் டரண்டமுழுதும் உன்னியெழு
சடையன் பாரி உயரி ரீங்காரி சூரி [கோரி மாவீரி
மருமருவு சடிலதரகாளி கங்காளி
சர்வாணி மாதங்கி சூலி மதமகிட
சங்காரி வீரசிங்காரி நெடுவாரி சூழ்பாரினிலவும்
தருமருவு பிட்டிநகர் உறையுமொரு கௌரியே
தயவு வைத்தெனை யாளுவாய்
சக்தியுத்தமி சித்திர மெத்து வித்தகி நித்திய
சக்தி பத்திரகாளியே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை



## வட்டுக்கோட்டை, பிட்டியம்பதி

# பத்திரகாளியம்மை ஊஞ்சல்

### காப்பு

திருமருவு வாணியிந்த் ராணி தாமும்
  தினம்பரவப் பிட்டிநக ரதனின் மேவும்
உருமருவு மாதிபத்ர காளி மீதில்
  உசிதமது ரத்தமிழி லூஞ்சல் பாட
மருமருவு மிதழிமதி யரவஞ் சூடும்
  வள்ளல்பங்கின் மருவுகிள்ளை வசனி யீன்ற
கருமருவு மதவதனப் புரிவெண் கோட்டுக்
  கணபதிகின் கிணிச்சரணங் காப்புத் தானே. 1.

[நிவேதனம்:— நெய்ச்சாதம், அருபனபாணக்கம், கரும்பு,
அரிபதரம், வடகரம்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமலிமா ணிக்கரத்நத் தூண் நாட்டி
மரகதமா மெழில்பெறுநற் சட்டம் பூட்டி
பூமலிசந் திரகிரண வடங்கள் தோத்துப்
புருடரா கத்தினுறு பலகை சேர்த்து
பாமலிசக் காவூஞ்சன் மிசையே மேவிப்
பாரதிசிர் படிக்கவிந்த்ரை வடந்தொட்ட டாட்ட
தாமமணி குழலணங்கே யாடீ ருஞ்சல்
சக்திபத்ர காளியம்மை யாடீருஞ்சல். 2.

[நிவேதனம்:– பருப்புச்சாதம், சிடை, மாம்பழம், பால் கற்கண்டு]

மங்கலமார் கங்கைதங்கை கவரி வீச
மடப்பிடிநேர் நடச்சசிபொன் னடைப்பை தாங்கத்
தங்ககரத்நக் கொடிகுடை காளிகள் கொண்டாடத்
தவிலடித்துக் காளிகள்சன் மினிகள் வாழ்த்தப்
புங்கவர்மங் கையர்களா லத்தி யேந்தப்
பூசுரர்மா முனிவர்மலர் சொரிந்தே போற்றச்
சங்கமுத்து வடமசைய வாடீ ருஞ்சல்
சக்திபத்ர காளியம்மை யாடீ ருஞ்சல் 3.

[நிவேதனம்:- சுத்தான்னம், பிட்டு, பழம்]

கொத்துமுத்துக் குப்பிதொங்கல் சுறங்கி ஞடக்
கொப்பினெடு குழைகளுமொப் பிதமா யாட
பத்திவைத்துக் கொத்துசித்திரப் பணிக ளாடப்
பருத்தமணி இருத்துதரப் பணியு மாட
வித்தகஞ்சே ரணிகளொடுத் தரிய மாட
மின்னிடையிற் பொன்னிடுமே கலைக ளாடச்
சத்திபரி புரங்குலுங்க வாடீ ருஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீ ருஞ்சல். 4.

[நிவேதனம்;- புளியோரை, தேன்குழல், தேன், தோடம்பழம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்திமுகத் துந்தமனுஞ் சுக்க ஞான
வாதிவயி ரவதேவ சுவாமி தானும்
சித்திரமெத் தியவீர பத்ர தேவுஞ்
சிந்தைமகிழ்ந் தேமருங்கிற் சிறந்து மேவப்
பந்திவைத்துத் தொண்டரண்டர் புகழைச் சாற்றப்
பாட்டினிசை காட்டிமுனை வோர்கள் போற்ற
தத்தையொத்த மொழியணங்கே யாடீ ரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். 5

[நிவேதனம்:- கடலை சுண்டல், மிளகுசாதம், தோசை வெண்ணெய், பலாப்பழம்]

அக்கணிந்தா னக்கனென வகந்தை யாலே
அரனையிகழ்ந் தயன்மகன்முன் னமரர் யாரும்
பக்கமுற மக்கண்மரு மக்கள் கூடப்
பண்ணுமக மழித்தபிரான் பாகம் மேவ
செக்கர்நிறச் சடைச்சிபிடி நடைச்சி யேயுன்
திருக்கடைக்கண் ணருள்செயன்று செகத்தோர் யாரும்
தக்கவிரு பதந்துதிக்க வாடீ ரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். 6.

நிவேதனம்:- வடை, பாயாசம், வாழைப்பழம், நெய்,

குளக்கரையி னிழற்கமுகிற் றுவி வாளை
குடித்தமிர்த மெனச்சொரிந்து குளிர் தேன்கள்
வளப்பழனத் திடைபெருகப் பயிருண் டாகும்
வட்டுநகர்ப் பிட்டிதனின் மகிழ்ந்து கூடி
உளத்தினெணித் துதியடியார் பாரமே லென்றும்
ஓங்குபுகழ் தாங்கியருட் செல்வ மேவித்
தழைக்கவருள் புரிந்திருந்தே யாடீ ரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். 7.

[நிவேதனம்:- தேன்சாதம், அட்டம், மாதுளம்பழம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கடல்பொன் நிறமாயன் கமலப் புத்தேழ்
கற்பகத்தி னறுமலருன் பகத்திற் றூவி
மருங்கிலெங்கு நெருங்கிநின்றே யாசி கூற
மாந்தர்கள்முற் போந்திக வளங்கள் கூற
வருங்கவிஞர் மதுரசுவைக் கவிகள் பாட
மத்தளதா ளத்தினொலி மல்கி நீட
தங்கருணைச் சமுத்திரமே யாடீ ரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். 8.

[நிவேதனம்:- தயிர்ச்சாதம், நீர்மோர், மோதகம், சுண்டல்
மாம்பழம், பயறு]

மதுரகவிப் புலவரிசைத் தமிழைப் பாட
மருந்துமொழித் திருந்திழையார் மகிழ்ந்து நாட
இதமலர்கள் சொரிந்தடியார் சரணஞ் சூட
எண்ணரும்விண் ணவரருள்செ யென்றே நாட
விதுவதனக் காளிகள்வந் தணிகள் தேட
வேதியர்தோத் திரநாத மிகுந்தே நீட
சதுரவித ரணமயிலே யாடீ ரூஞ்சல்
சத்திபத்ர காளியம்மை யாடீ ரூஞ்சல். 9.

[நிவேதனம்:- பாற்சாதம், பாலுரட்டி, பேரீச்சம்பழம், நெய்]

## வாழி

ஆரணங்கள் வாழி சிவாகமங்கள் வாழி
அரியமறை வைதிகசை வங்கள் வாழி
காரணமாக மனுமுறைக ளினிது வாழி
காலிநிரை வாழிபத்ர காளித் தாய்க்குத்
தாரணியி லூஞ்சல்செய்வித் துவந்து போற்றுஞ்
சற்குணவுத் தமர்களெலாந் தழைத்து வாழி
ஏரணியும் பிட்டியெனும் பதியும் வாழி
யிசைந்திடுமுஞ் சற்றமிழும் வாழி தானே. 10

[நிவேதனம்:— குளான்னம், அதிரசம், இட்டலி, தாம்பூலம்,
பூகபழம், வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் ]

முற்றிற்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதோ!

3 மணித்தியாலத்தில் றபர் சீல் செய்து கொடுக்கப்படும்.

வடமாகாணத்தில்

"சில்க் ஸ்கிறீன்"

போஸ்ரர் அச்சிடுபவர்கள்.

# தரன் ஆட்ஸ்

(ராஜா தியேட்டர் முன்)

72/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

மற்றும்,

- ★ சினிமா சிலேட்ஸ்
- ★ விளம்பர போட்ஸ்
- ★ லேபல் டிசைன்ஸ்
- ★ புளொக்ஸ்

தயாரிப்பாளர்கள்.

சகல விதமான

ஒவிய வேலைகளும் செய்பவர்கள்.


விவேகானந்த அச்சகம், யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org